பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 05 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைத் தேர்தலில் இன்று நடைபெற்ற ஆறாம் கட்ட வாக்குப்பதிவில் மாலை ஐந்து மணி நிலவரப்படி 58 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- காங்கிரஸ் மற்றும் ஐ என் டி ஐ கூட்டணிக்கு தொலைநோக்கு பார்வையோ, கொள்கையோ இல்லை என பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- பிஜேபி கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகளில் பெரும் செல்வந்தர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.
- கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருதை இந்தியாவின் அனசுயா சென்குப்தா பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.
- ஜமைக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஆரியன்ஷா – ஆதித்ய கணேசன் இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலுக்கான ஆறாம் கட்ட வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று முடிந்தது.

மாலை ஐந்து மணி நிலபரப்படி 58 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆறு மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதில், அதிகபட்சமாக மேற்குவங்கத்தில் 78 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன,

பீகாரில் 52 சதவீதமும், ஹரியானாவில் 56 சதவீதமும், ஜம்மு காஷ்மீரில் 51 சதவீதமும், ஜார்கண்டில் 61 சதவீதமும், தில்லியில் 54 சதவீதமும், ஒடிஸாவில் 59 சதவீதமும், உத்தரப்பிதேசத்தில் 52 சதவீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், புதுதில்லியில் உள்ள வாக்குச்சாவடியில் தங்களது வாக்கினை செலுத்தினர்.

தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுதில்லியில் வாக்களித்தார்

தேர்தல் ஆணையர்கள் திரு **Gyanesh Kumar** திரு **Sukhbir Singh Sandhu** ஆகியோரும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, மத்திய அமைச்சர்கள் திரு ஜெய்சங்கர், திரு ஹர்தீப் சிங் பூரி ஆகியோரும் புதுதில்லியில் உள்ள வாக்குச்சாவடியில் தங்களது வாக்கினை செலுத்தினர்.

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலும் குடும்பத்தினருடன் வாக்களித்தார்.

இந்த ஆறாம் கட்டத்தேர்தலுடன் ஒடிஷா சட்டப்பேரவைக்கு மூன்றாவது கட்டமாக 42 தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

மாலை ஐந்து மணி நிலவரப்படி 59 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள எழாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

ஏழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 57 தொகுதிகளில் ஏழாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

இதனிடையே மக்களவைத் தேர்தலில் முதல் ஐந்து கட்ட வாக்குப்பதிவு குறித்த விவரங்களை தேர்தல் ஆணையம் இன்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது.

ஐந்து கட்ட தேர்தலில் மொத்தம் 50 கோடியே 72 லட்சம் பேர் தங்கள் வாக்குகளை செலுத்தி உள்ளதாக தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

காங்கிரஸ் மற்றும் ஐ என் டி ஐ கூட்டணிக்கு தொலைநோக்கு பார்வையோ, கொள்கையோ கிடையாது என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் கராகட்டில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், வாக்கு வங்கிக்காக அந்த கூட்டணியினர்

மக்களிடையே தேவையில்லாத விஷயங்களைப் பேசி அச்சுறுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணுஆயுத சக்தியாக உருவெடுக்கிறது என்றும், அரசியல் சட்டத்தின் 370-வது பிரிவு நீக்கப்பட்டது தவறு என்றும் கூறி குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் ஊழலில் ஈடுபட்ட காரணத்தால்தான் மத்திய புலனாய்வு அமைப்புகளின் சோதனையின்போது சிரமத்திற்கு உள்ளானதாகவும் அவர் தெரிவித்தார்.

பீகாரில் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு நிச்சயம் சட்டத்தின்படி தண்டனை கிடைக்கும் என்றும் திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகளில் பெரும் செல்வந்தர்களுக்கு மட்டுமே ஆதரவாக செயல்பட்டு வந்ததாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி வதேரா கூறியுள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் கோரக்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பெரும் தொழிலதிபர்கள் பெற்ற 16 லட்சம் கோடி

ரூபாய் கடனை இந்த கூட்டணி அரசு தள்ளுபடி செய்ததாகவும் தெரிவித்தார்.

சாமானிய மக்களுக்கான வேலைவாய்ப்புகளும், தொழில் வசதிகளும் கிடைக்காத நிலை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேலைவாய்ப்பின்மை பற்றியோ, அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு, பணவிக்கம் பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

குஷி நகரில் செயல்பட்டு வந்த பத்து சர்க்கரை ஆலைகளில் ஆறு சர்க்கரை ஆலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் நலனுக்காக செயல்படுவதாகக் கூறி வரும் பிஜேபி, விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்வதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று திருமதி பிரியங்கா காந்தி கூறினார்.

இதனிடையே பீகார் மாநிலம் நாலாந்தா தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட ராஷ்ட்ரீய ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத் யாதவ், மக்கள் சந்தித்து வரும் உண்மையான பிரச்சினைகளை சிந்திக்க விடாமல் திசை திருப்பும் முயற்சியில் பிஜேபி ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

பிஜேபி மற்றும் கூட்டணி கட்சியினர் தோல்விபயத்தில் உள்ளதாகவும், திரு தேஜஸ்வி பிரசாத் கூறினார்.

உத்திரபிரதேச மாநிலம் கோரக்பூரில் பிரச்சாரம் மேற்கொண்ட பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி, காங்கிரஸ் கட்சி தவறான கொள்கைகளை பின்பற்றி வருவதால், அவர்கள் பின்னடைவை சந்திக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

பிஜேபி செல்வந்தர்களையும், பெரும் முதலாளிகளையும் ஆதரிப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

**[]<<<>>>[]**

மேற்குவங்க மாநிலம் **Jhargram** தொகுதியில் போட்டியிடும் பிஜேபி வேட்பாளர் டாக்டர் **Pranat tudu** அடையாளம் தெரியாத கும்பலால் தாக்கப்பட்டுள்ளார்.

மேற்கு மிதுனாப்பூர் மாவட்டம் கார்பெட்டா பகுதியில் அவரது வாகனம் சென்று கொண்டிருந்தபோது திரு பிரணத்தும், அவரது ஆதரவாளர்களும் தாக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறீத்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மேற்குவங்க தலைமை தேர்தல் அதிகாரி காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரான்ஸில் நடைபெற்று வரும் 77-வது கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருதை இந்தியாவின் அனசுயா சென்குப்தா பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

பல்கேரிய நாட்டின் இயக்குநர் கான்ஸ்டான்டைன் படைப்பில் உருவான **The shameless** என்ற திரைப்படத்தில் சிறப்பாக நடித்ததற்காக இந்த விருது அவருக்கு கிடைத்துள்ளது.

கேன்ஸ் திரைப்பட விழாவில் விருது பெற்ற முதல் இந்திய நடிகை என்ற பெயரை அனசுயா சென்குப்தா பெற்றுள்ளார்.

**[]<<<>>>[]**

பங்குச்சந்தை பரிவர்த்தனைக்கான புதிய விதிமுறைகளை செபி இன்று வெளியிட்டுள்ளது.

பங்குச்சந்தை பரிவர்த்தனைக்கான ஆன்லைன் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு புதிய நடைமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பங்குச்சந்தைகள், பதிவுபெற்ற பங்குச்சந்தை இடைதரகர்கள், பங்குகளுக்கான க்ளியரிங் அமைப்புகள் ஆகியவற்றுக்கும் புதிய நடைமுறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பங்கு வர்த்தகத்தில் மூன்றாவது தரப்பினருக்கு நிகர்நிலை விலை குறியீடுகளை அளிப்பதற்கும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

நேட்டோ அமைப்பைச் சேர்ந்த ஆறு நாடுகள் தங்களது எல்லைப் பகுதிகளை பாதுகாக்க ட்ரோன் சுவரை எழுப்பியுள்ளதாக அறிவித்துள்ளன.

போலந்து, பின்லாந்து, நார்வே. லித்துவேனியா, லட்டிவா, யஸ்டோனியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இந்த பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

நார்வேயின் எல்லைப்பகுதி தொடங்கி போலந்து எல்லை முடியும் வரை ட்ரோன் மூலம் கண்காணித்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த ட்ரோன் சுவர் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைக்கு அப்பாலிருந்து வரும் ட்ரோன் தாக்குதல்களை முன் கூட்டியே கண்டறிந்து அதை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்த ஆறு நாடுகளும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுவடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது வடமேற்காக நகர்ந்து, நாளை காலை தீவிர புயலாக வலுவடைந்து, பங்களாதேஷுன் **Khepupara** - மேற்குவங்கத்தின் சாஹர் தீவுகள் இடையே நாளை நள்ளிரவு கரையை கடக்கக்கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செந்தாமரைக்கண்ணன் ) -26-- செகண்ட்*

இதனிடையே அடுத்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக திரு செந்தாமரைக்கண்ணன் கூறினார்.

இந்நிலையில் தென்மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக மிதமான பெய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஒருவாரகாலமாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக வயல்களில் தேங்கியுள்ள தண்ணீர் குளம்போல் காட்சியளிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

இந்நிலையில் கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

ஜமைக்காவில் நடைபெற்று வரும் சர்வதே டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஆரியன்ஷா – ஆதித்ய கணேசன் இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தி.ல் இந்த இணை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kosuke ogura – Leo vithoontien** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றைய பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் பி வி சிந்து 13-21, 21-16, 21-12 என்ற செட் கணக்கில் தாய்லாநது வீராங்கனையை வென்றார்

**[]<<<>>>[]**

-----------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா – பெர்ஜியம் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இரவு மணி 7.45-க்கும் தொடங்குகிறது.

மகளிர் பிரிவில் இந்தியா, – பெல்ஜியத்திடம் தோல்வியடைந்தது.